KEMENTERIAN
PENDIDIKAN
MALAYSIA

# கலையியல் கல்வி

# PENDIDIKAN KESENIAN

ஆண்டு
TAHUN
4

## SEKOLAH JENIS KEBANGSAAN TAMIL

## தேசிய வகைத் தமிழ்ப்பள்ளி



KURIKULUM STANDARD SEKOLAH RENDAH
KSSR
(SEMAKAN 2017)
KEMENTERIAN PENDIDIKAN MALAYSIA

KURIKULUM STANDARD SEKOLAH RENDAH (SEMAKAN 2017)

# கலையியல் கல்வி ஆண்டு
# PENDIDIKAN KESENIAN TAHUN 4

## SEKOLAH JENIS KEBANGSAAN TAMIL
## தேசிய வகைத் தமிழ்ப்பள்ளி




Penulis
Othaya Kumaran Kandasamy BCK., PJK
Asihwiniy Francisco
Risikesh Subramaniam

ஆசிரியர்கள்
உதயகுமாரன் கந்தசாமி BCK., PJK
அஷ்வினி பிரான்சிஸ்கோ
ரிஷிகேஷ் சுப்ரமணியம்

Editor
Vaani Subramaniam
Vanitha Darman

பதிப்பாசிரியர்கள்
வாணி சுப்ரமணியம்
வனிதா தர்மன்

Pereka Bentuk
Amos Raja Rajalingam
Prabu Palani

வடிவமைப்பாளர்
ஆமோஸ் ராஜா ராஜலிங்கம்
பிரபு பழனி

Ilustrator
Azrul Helmi Bin Abd. Wahab
Maseh Bin Supian

ஓவியர்கள்
அஸ்ருல் ஹெல்மி பின் அப்துல் வஹாப்
மாசேஹ் பின் சுப்பியான்



Multi Educational Book Enterprise
2019

KEMENTERIAN
PENDIDIKAN
MALAYSIA

No Siri Buku: 0039

KPM2019 ISBN 978-967-2046-38-7

Cetakan Pertama 2019

**© Kementerian Pendidikan Malaysia**

Hak Cipta Terpelihara. Mana-mana bahan dalam buku ini tidak dibenarkan diterbitkan semula, disimpan dalam cara yang boleh dipergunakan lagi, ataupun dipindahkan dalam sebarang bentuk atau cara, baik dengan cara bahan elektronik, mekanik, penggambaran semula mahupun dengan cara perakaman tanpa kebenaran terlebih dahulu daripada Ketua Pengarah Pelajaran Malaysia, Kementerian Pendidikan Malaysia. Perundingan tertakluk kepada perkiraan royalti atau honorarium.

**Diterbitkan untuk**
**Kementerian Pendidikan Malaysia oleh:**

**Multi Educational Book Enterprise**
No. 22A-2, Jalan PJS 8/4,
Dataran Mentari, Bandar Sunway,
46150 Petaling Jaya,
Selangor Darul Ehsan.
Tel: 03-5636 2568
Faks: 03-5636 0825
Laman Web: http://www.multiedu.com.my

**Reka Letak dan Atur Huruf:**

**Multi Educational Book Enterprise**

Muka Taip Teks: Dhanyeta
Saiz Muka Taip Teks:14 poin

**Dicetak oleh:**

**Aslita Sdn. Bhd. (146102-U)**
No. 20, Jalan 4/10B, Spring Crest Industrial Park
Batu Caves, 68100 Kuala Lumpur.
Tel:03-61867645
Faks:03-61867635

# PENGHARGAAN

Penerbitan buku teks ini melibatkan kerjasama banyak pihak. Sekalung penghargaan dan terima kasih ditujukan kepada semua pihak yang terlibat:

- Jawatankuasa Penambahbaikan Pruf Muka Surat, Bahagian Sumber dan Teknologi Pendidikan, Kementerian Pendidikan Malaysia.
- Jawatankuasa Penyemakan Pembetulan Pruf Muka Surat, Bahagian Sumber dan Teknologi Pendidikan, Kementerian Pendidikan Malaysia.
- Jawatankuasa Penyemakan Naskhah Sedia Kamera, Bahagian Sumber dan Teknologi Pendidikan, Kementerian Pendidikan Malaysia.
- Pegawai-pegawai Bahagian Sumber dan Teknologi Pendidikan, Bahagian Pembangunan Kurikulum, Kementerian Pendidikan Malaysia.
- Jawatankuasa Peningkatan Mutu Penerbit.
- Jabatan Kebudayaan dan Kesenian Negara.
- Jabatan Pendidikan Seni Visual, IPG Kampus Sultan Abdul Halim, Sungai Petani, Kedah.
- SJKT Ladang Juasseh, Kuala Pilah, Negeri Sembilan.
- SJKT Arumugam Pillai, Alor Pongsu, Perak.
- Dakshra Fine Arts, Subang Jaya, Selangor.

# உள்ளடக்கம்


முன்னுரை iv

பட உருக்களும் விளக்கங்களும் vi

கருவியும் உபகரணமும் 1

காட்சிக்கலையும் நாமும் 2

இசைக் கலையும் நாமும் 3

**பருவம் ஒன்று** - திட்ட நடவடிக்கை 4

**அலகு 1** ஓவியமும் அதன் நுட்பமும் 6

**அலகு 2** துண்டு ஒட்டுப்படத்தில் எழில் ஓவியம் 12

**அலகு 3** ‘புவாலாமான்’ கோலம் 19

**அலகு 4** சிற்பக்கலையில் கலை வடிவங்கள் 30

**அலகு 5** செதுக்கும் கலை 37

**பருவம் இரண்டு** - திட்ட நடவடிக்கை 49

**அலகு 6** சுவரொட்டி 52

**அலகு 7** அச்சடித்தலும் அழகோவியமும் 58

**அலகு 8** அச்சுக் கோலங்கள் 67

**அலகு 9** கலை சொல்லும் கதை 78

**அலகு 10** பாரம்பரிய பண்பாட்டுப் பொருள் 87

காட்சிக்கலைக் கல்வி மதிப்பீடு 97

இசைக் கல்வி மதிப்பீடு 101

கலைச்சொல் அகராதி (காட்சிக்கலைக் கல்வி) 105

கலைச்சொல் அகராதி (இசைக் கல்வி) 106

# முன்னுரை

மலேசியக் கல்வி அமைச்சின் கலைதிட்ட மேம்பாட்டுப் பிரிவின் பரிந்துரையின் கீழ் நான்காம் ஆண்டிற்குரிய இக்கலையியல் கல்வி, தர ஆவண அடிப்படையில் காட்சிக்கலைக் கல்வியும் இசைக்கல்வியும் ஒருங்கிணைக்கப்பட்ட நிலையில் உருவாக்கப்பட்டது. கலைமொழியான கலைக்கூறுகள், உருவாக்கத்தின் கோட்பாடுகள், இசைமொழி, படைப்பாற்றல், ஆக்கத்திறன், புத்தாக்கத்திறன், கலையை மதித்துப் போற்றுதல், கலையியல் திட்ட இடுபணி போன்ற கோட்பாடுகளின் அடிப்படையில் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது.

பத்து அலகுகளின் கீழ் இந்நூல் தொகுக்கப்பட்டு, பருவம் ஒன்றில் 1 முதல் 5 அலகுகளாகவும் பருவம் இரண்டில் 6 முதல் 10 அலகுகளாகவும் வகுக்கப்பட்டுள்ளன. காட்சிக்கலைக் கல்வியும் இசைக் கல்வியும் ஒருங்கிணைக்கப்பட்ட நிலையில் ஒவ்வொரு தலைப்பின்கீழ் மாணவர்கள் எளிதில் புரிந்து கொள்ளும் வண்ணம் அடிப்படை விளக்கங்களோடு பாடத்தொடர் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

காட்சிக்கலைக் கல்விப் பிரிவில் பல்வேறு நடவடிக்கைகளுடன் பாட அறிமுகம், காட்சிக் கலைமொழி, கருவி, உபகரணம், செய்முறை பயிற்சி ஆகியன விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளன. மாணவர்களின் ஆர்வத்தையும் கலைத்துறையில் அவர்களின் ஈடுபாட்டினையும் மேம்படுத்தும் நோக்கில், அனைத்துத் தலைப்புகளுக்கும் படைப்பாற்றலை மேம்படுத்த எளிதான செய்முறைப்பயிற்சிகள் காணொளியாக உருவாக்கப்பட்டுள்ளன. நான்காம் ஆண்டிற்கென இணையத்தளம் சிறப்புக் குறியீட்டுடன் உருவாக்கப்பட்டுள்ளது. இணையத்தள நோக்கக் குறியீடுகளான (QR & AR) பயன்பாட்டின்வழி இதனைக் கண்டு, கற்றுப் பயன்பெற்று மாணவர்கள் படைப்பாற்றலில் திறன் பெறலாம்.

மாணவர்கள் இசைத்துறையில் ஆர்வம் மேலோங்கப் பல்வேறு நிலைகளிலான இசைக் குறிப்புகளும் உதாரண நடவடிக்கைகளும் இப்பாட நூலில் கொடுக்கப்பட்டுள்ளன.

கலையியல் கல்வியில் அனைத்து நிலைகளிலும் முழுமையான அடைவு நிலையினை மாணவர்கள் பெறும் பொருட்டு, பள்ளி உருமாற்றுத் திட்டம் (TS25), 21ஆம் நூற்றாண்டுப் பயிற்றியல் (Abad ke 21), உயர்நிலைச் சிந்தனைத் திறன் (KBAT), விரவிவரும் கூறுகள் (EMK), சிந்தனைக் குறிவரைவு (i-Think), தகவல் தொழில்நுட்பம், எதிர்காலவியல் ஆகிய கூறுகளும் இணைக்கப்பட்டுள்ளன. அதனோடு ஒவ்வொரு பக்கத்திலும் ஆசிரியர் குறிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. கற்றல் கற்பித்தல் திறனைப் பயன்மிக்க முறையில் மேற்கொள்ள இவை அனைத்தும் ஆசிரியர்களுக்கு உறுதுணையாக இருக்கும்.

கலையியல் கல்விப் பாடநூல் சிறப்பாக உருவாகத் துணை நின்ற மலேசியக் கல்வி அமைச்சின் பாடநூல் பிரிவிற்கும் கலைத்திட்ட மேம்பாட்டுப் பிரிவிற்கும் மற்ற நல்லுள்ளங்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கலையியல் கல்வியைக் கசடறக் கற்றுக் கலையோடு இசைத்திறனை வளர்ப்போம்!

நன்றி,
ஆசிரியர்கள்

# பட உருக்களும் விளக்கங்களும்




இசை நடவடிக்கையை மேற்கொள்ள வழங்கப்பட்டுள்ள பாடலும் பயிற்சியும் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் துணைபுரியும்.




தடம்

ஆசிரியர் குறிப்பு:
கற்றல் கற்பித்தலை மேற்கொள்ள ஆசிரியருக்கான கூடுதல் வழிகாட்டி

கற்றல் திறன் எண்



காட்சிக்கலைப் பக்கம்


இசைப் பக்கம்


உயர் நிலைச் சிந்தனை


தகவல்


உங்கள் சிந்தனைக்கு



நடவடிக்கை


செய்முறைப் பயிற்சி


ஆசிரியர் குறிப்பு


பயிற்சி


இசைப் பயிற்சி


நிரலொழுங்கு வரைபடம்



## இணையத் தளம் QR நோக்குக் குறியீடு

App Store | Google play


## ஜெப்பர் (ZAPPAR) பெற இங்கு நோக்குக

App Store | Google play

AR நோக்குக் குறியீடு

# கருவியும் உபகரணமும்

காட்சிக் கலையில் ஒரு படைப்பினைப் படைப்பதற்குக் கருவியின் பயன்பாடு மிக முக்கியப் பங்கினை ஆற்றுகிறது. கருவியினை நுணுக்கமான முறையில் கையாளும் திறனை மாணவர்கள் நன்கு அறிந்திருத்தல் அவசியமாகும். நான்காம் ஆண்டிற்குரிய கலையியல் கல்விப் பாடத்திற்கான கருவியும் அதன் பயன்பாடும் குறித்து அறிவோம்.

| கருவி | பயன்பாடு |
|---|---|
|  திரவ வண்ணம் | திரவ வண்ண அடிப்படையிலான ஓவியங்களுக்குப் பயன்படுத்தப்படும் வண்ணப்பூச்சலாகும். திரவ வண்ணத்தைச் சித்திரத்தாள், அட்டை, வெண்துணி, சுவர், தரை ஆகிய தளங்களில் பயன்படுத்தலாம். |
|  எண்ணெய் திரவ வண்ணம் | எண்ணெய் திரவ வண்ணம் ‘புவாலாமான்’ நுட்ப ஓவியப் படைப்பினை உருவாக்கப் பயன்படுத்தப்படுகிறது. |
|  வண்ண எழுதுகோல் | வண்ண எழுதுகோல் புனையா ஓவியங்களை உருவாக்கப் பயன்படுத்தப்படுகிறது. |
|  மெழுகு வண்ணம் | மெழுகு வண்ணம் புனையா ஓவியங்களுக்கும் மெழுகுக் கலை (ரெசிஸ்) படைப்பினை உருவாக்கவும் பயன்படுத்தப்படுகிறது. |
|  தட்டையான தூரிகை | திரவ வண்ண ஓவியத்தினைப் படைக்கத் தூரிகையின் பயன்பாடு அவசியமாகிறது. ஓவியத்தில் நுணுக்கமான பகுதிகளை உருவாக்க கூர்மையான தூரிகை அவசியமாகிறது. |
|  இசைக் கருவிகள் | இசைக் கருவிகளைத் தட்டுதல், அசைத்தல், ஊதுதல் போன்ற முறைகளில் இசைக்கலாம். தாளக் கருவிகளை இரு விதமாக வகைப்படுத்தலாம். அவை சுதி கொண்டதும், சுதியற்றதுமாக வகைப்படுத்தலாம். |

## காட்சிக்கலையும் நாமும்

மாணவர்களே, கலைக்கூடத்தில் இடம் பெற்றுள்ள காட்சிக்கலைப் படைப்புகளைப் பற்றி உங்கள் ஆசிரியரிடம் கலந்துரையாடுக.



## இசைக்கலையும் நாமும்

இசை விழாவில் காணப்படும் பாடல், அசைவு, இசைக் கருவிகளை வாசித்தல் ஆகிய 3 கூறுகளை மாணவர்கள் கவனிக்கவும். இதன் தொடர்பாக ஆசிரியர், மாணவருடன் கலந்துரையாடுக.





# பருவம் ஒன்று - திட்ட நடவடிக்கை

முதல் பருவ இறுதியில் மாணவர்கள் குழுவாக இணைந்து திட்ட நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். அதனை முறையாகத் திட்டமிட்டு வகுப்பு நண்பர்களுடன் சேர்ந்து கலந்தாலோசித்து மேற்கொள்ளுங்கள்.

## நடவடிக்கைக்கு முன்

1. அலகு 1 முதல் 5 வரை இடம் பெற்றுள்ள படைப்புகளில் ஏற்புடையதைத் தேர்வு செய்தல்.
2. குழு முறையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளல். பயிற்சிகளை முறையாகச் செய்தல்.

குழு 1 இசை, பாடல் பயிற்சி
குழு 2 நடனம் - நாட்டிய நாடகம்
குழு 3 இசைக்கருவிகளை இசைத்தல்.
குழு 4 படைப்பிற்கான ஆவணங்களைத் தயார் செய்தல்.

## நடவடிக்கையின் போது

1. மாணவர்கள் பொறுப்புகளுக்கு ஏற்றவாறு பணியினைத் திறன்படச் செய்தல்.
2. மாணவர்கள் படைப்பிற்குத் தேவையான ஆவணங்களை உபயோகித்து நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.




## நடவடிக்கைக்குப் பின்

1. படைப்புகளுக்குப் பிறகு பயன்படுத்திய பொருள்களை மாணவர்கள் முறையே அடுக்குதல்.
2. படைப்புகளை மேற்கொண்ட இடத்தினைத் தூய்மை செய்தல்.
3. படைப்புகளை மேற்கொண்ட சான்றுகளோடு மாணவர்கள் திரட்டேடு தயாரித்தல்.

**ஆசிரியர் குறிப்பு**

3.3.1 (i-ii)
3.3.4
3.4.1
3.4.2
3.4.3
4.2.2

- அலகு 1 முதல் 5 வரையிலான பாட உள்ளடக்கத்தைப் பயன்படுத்தி முதல் பருவ திட்ட நடவடிக்கைக்கான முன்னேற்பாடு, படைப்பு, தேவையான பொருள்கள் ஆகியவற்றைத் தயார் செய்ய மாணவர்களுக்கு வழிகாட்டல்.
- படைப்பிற்கான இசையைத் தயார் செய்து மாணவர்கள் திட்ட நடவடிக்கையை முறையாக மேற்கொள்ளத் தூண்டுதல்.
- படைப்பினை மதித்துப் போற்றுதல்.
- படைப்பிற்குப் பயன்படும் பொருள்களை முறையாகக் கையாள்வதை உறுதி செய்தல்.
- படைப்பிற்குப் பிறகு பயன்படுத்திய கருவிகளையும் பொருள்களையும் முறையாக அடுக்கி வைப்பதுடன் திட்ட நடவடிக்கை தளம் தூய்மையாக இருப்பதையும் உறுதி செய்தல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21 ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம் / குழுவாகச் செயல்படுதல்

# அலகு 1 ஓவியமும் அதன் நுட்பமும்

திரவ வண்ணப்பூச்சுகளின் பயன்பாட்டில் இயற்கை அல்லது செயற்கைப் பொருள்களின் உருவகங்களையும் படிமங்களையும் வரைவதே ஓவியங்களாகும்.



ஈர மேல்தளத்தில் ஈரத் தன்மை



காய்ந்த மேல்தளத்தில் ஈரத் தன்மை



புனையா ஓவியம்



ஈர மேல்தளத்தில் காய்ந்த தன்மை



காய்ந்த மேல்தளத்தில் காய்ந்த தன்மை

## நடவடிக்கை 1

அ. மேற்கண்ட ஓவிய நுட்பங்களின் வேறுபாடு குறித்து உனது நண்பர்களிடம் கலந்துரையாடுக.

ஆ. மிகச் சுலபமாகக் கையாளக்கூடிய நுட்பம் எது?

ஈர மேல்தளத்தில் ஈரத் தன்மை கொண்ட ஓவியத்தை வரையும் முறையை நண்பர்களிடம் விளக்குக.

**ஆசிரியர் குறிப்பு**

1.1.1(i)
2.1.1(i)

- புனையா ஓவியப் படைப்புகளில் காட்சிக்கலை மொழிகளை அடையாளங்கண்டு அவற்றைப் படைப்போடு தொடர்புபடுத்திக் கலந்துரையாடுதல்.
- காட்சிக்கலை மொழி அறிவின்வழி, உபகரணங்கள், நுட்பமுறை, அமலாக்க முறையை அறிதல்.

**வி.வ.கூ:** சுற்றுச்சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல் **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21 ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

# வண்ணப்பூக்கள்

## பொருள்களும் கருவிகளும்



சித்திரத்தாள்



நீர்



தூரிகை




எழுதுகோல்




திரவ வண்ணம்

1




வரைதல்

2



நீரால் நனைத்தல்

3



வண்ணமிடுதல்

4



நிறைவு செய்தல்



முழுமையான படைப்பு

**தகவல்**

சித்திரத்தாளினை அதிகம் நனைய விடக்கூடாது.

**ஆசிரியர் குறிப்பு**

2.1.1(i-ii)
3.1.1(i-v)
4.1.1
4.1.2

- ஈர மேல் தளத்தில் ஈரத் தன்மை நுட்பத்தில் கலைப் படைப்பினை உருவாக்க மாணவர்களுக்கு வழிகாட்டியாக இருத்தல்.
- படைப்பினைச் சீர்மைப்படுத்தத் தூண்டுதல்.
- உருவாக்கிய படைப்பினைக் காட்சிக்கு வைத்து மதித்துப் போற்றும்படி தூண்டுதல்.

**வி.வ.கூ:** சுற்றுச்சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல் **உ.சி.தி:** உருவாக்குதல் / மதிப்பிடுதல் **21 ஆம் நூற்றாண்டு:** சிந்தனையாளர் / அறியும் ஆர்வம்

# சரியான உடலமைவுடன் பாடுதல்


மாணவர்கள் பாடல் தொடர்பான நடவடிக்கையின்போது கவனிக்கப்பட வேண்டியவை

## நிற்கும் நிலையிலான உடலமைவு



- தாடை : தரைக்கு நிகராக இருத்தல் வேண்டும்.
- தோள் பட்டை : பின்னால் இழுத்த நிலையில் வேண்டும்.
- நெஞ்சு : நிமிர்ந்த நிலையில் இருத்தல்.
- உடல் : உடல் நிமிர்ந்திருக்கும் நிலை.
- கை : கைகள் பக்கவாட்டில் இயல்பான நிலையில் இருத்தல்.
- கால் : கால்கள் சற்று அகன்று ஒரு கால் முன் வைத்த நிலையில் இருத்தல்.

## உட்கார்ந்த நிலை



- தலை முதல் உடல் வரை : நிற்கும் நிலை போல இருத்தல்.
- உடலின் பின்பக்கம் : நிமிர்ந்த நிலையில் இருத்தல்.
- கை : தொடையில் வைத்த நிலை.
- பிட்டம் : நாற்காலியில் பாதி உட்கார்ந்த நிலை.
- கால் : கால் தரையில் படும் வகையில் ஒரு கால் முன் வைத்த நிலை.

**ஆசிரியர் குறிப்பு**

- உடலமைவினை முறைப்படுத்தவும் நடவடிக்கைக்கு முன் உடலமைவுப் பயிற்சியை மேற்கொள்ள மாணவர்களைத் தூண்டுதல்.
- இருவராக குழுமுறையில் நடவடிக்கையினை மேற்கொள்ளலாம்.



**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21 ஆம் நூற்றாண்டு:** தகவல் நிறைந்தவர்

மூன்றாம் ஆண்டில் பயின்ற மூச்சுப் பயிற்சியினை ஆசிரியர் வழிகாட்டலுடன் மீள்பார்வை செய்யவும்.

பாடல் பாடுவதைத் தொடங்கும் முன் குரலிசை வெதுப்பல் தொடர்பான பயிற்சி அவசியம். இதன்வழி பாடலின்போது இயங்கும் குரல் உறுப்புகளை முறையாக இயக்க உதவும்.




### 1. குரலோசை - வாய்ப்பாட்டு

- வாயை மூடிக் கொண்டு (குரலோசை) குரலோசையின் வழி கீழிருந்து மேல் நோக்கிய அளவில் தொனியை ஏற்படுத்துதல்.
- இந்நடவடிக்கையைத் தொடர்ந்து செய்தல்.

### 2. வாய்ப்பாட்டின்வழி உயிரெழுத்து, உயிர்மெய்யெழுத்து உச்சரிப்பு

- வாய்ப்பாட்டுப் பயிற்சிக்குப்பின் உயிர், உயிர்மெய் எழுத்துகளை ஒலிக்கும் பயிற்சியை மேற்கொள்ளுதல்.
- வாயைத் திறந்து அ, இ, ஐ, உ, ஒ மற்றும் மா, நா, சா, கா, ஹா எழுத்துகளை ஒலிக்கும் பயிற்சிகளைச் செய்தல்.
- 'பியானோ' அல்லது 'கீ போர்டின்' துணையுடன் இந்நடவடிக்கையினைத் தொடர்தல் வேண்டும்.

### 3. கீழ்நிலை தொனியுடன் தொடங்குதல்

முதல், இரண்டாம் நடவடிக்கைக்குப் பின் கீழ்நிலை தொனியுடன் பாடலைப் பாடி மேல்நிலை தொனியுடன் தொடர்ந்து பாடுக.

**நடவடிக்கை**

பாடும் நடவடிக்கையின் போது இயங்கும் உடல் உறுப்புகள் யாவை?

ஆசிரியர் குறிப்பு

- *(Latihan pemanasan vokal)*குரல் வெதுப்பல் பயிற்சியைச் சரியாக மேற்கொள்ளும் முறைமையைக் குறித்துக் கலந்துரையாடவும்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21 ஆம் நூற்றாண்டு:** தகவல் நிறைந்தவர்

## இசைக் குறியீட்டுப் பாடலைப் பாடுவோம்.

Track 1 Lagu Notasi
Track 2 Instrumental Lagu Notasi

### இசைக் குறியீட்டுப் பாடல்




2.2.2
1.2.1
1.2.3
2.2.3
2.2.7

**ஆசிரியர் குறிப்பு**

- இசையோடு பாடலைச் சரியாகப் பாடத் தூண்டுதல்.
- பாடலின் வடிவம், நடை ஆகியவற்றை அடையாளங்காணல்.



**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** உருவாக்குதல் **21 ஆம் நூற்றாண்டு:** குழுவாகச் செயல்படுதல்

பாடலைச் சரியாக உச்சரித்துப் பாடுக.

Track 3 Lagu Ikan kekek



Ikan **ke**kek **mak** iloi-iloi,
Ikan **gelama** **mak** ilai-ilai,
Nanti adik **ma**k iloi-iloi,
**Pu**lang sa**ma** **mak** ilai-ilai.

கருமையாக்கப்பட்ட சொற்களைக் கவனிக்கவும்

**Ada** sa**tu** si ikan **pa**rang,
**Bada**nnya **pa**njang berbelang-**be**lang,
**I**sinya sikit **ba**nyak **tu**lang,
Sedap **di**makan **ka**lau **ma**sak pindang.

Ikan **ke**kek **oi,** ikan **ke**kek,
Ikan **ke**kek **oi**, ikan **ke**kek,
Ikan **ke**kek, ikan **ke**kek.

x2

(Lagu Tradisional Melayu)

2.2.2
2.2.3

ஆசிரியர் குறிப்பு

- சரியான உச்சரிப்புடன் பாடலைப் பாட வேண்டும்.
- இசைக் கருவிகளையும் அசைவுகளையும் கொண்டு பயிற்சி செய்ய வேண்டும்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** உருவாக்குதல் / மதிப்பிடுதல் **21 ஆம் நூற்றாண்டு:** சிந்தனையாளர்

# அலகு 2 துண்டு ஒட்டுப்பட எழில் ஓவியம்

ஒரு குறிப்பிட்ட தலைப்பில் காகிதம் அல்லது மற்ற பொருள்களைச் சிறு துண்டுகளாகக் கத்தரித்துப் படைப்புகளை உருவாக்குவதே துண்டு ஒட்டுப்படம் (மோசேக்). கத்தரிக்கப்படும் பொருளின் அளவு வேறுபட்டிருக்கலாம். ஆனால், ஒன்றின் மேல் ஒன்றாக ஒட்டக்கூடாது.



தரையில் 'மோசேக்' நுட்பம்



ஒரு காட்சியினை 'மோசேக்' வடிவத்தில் உருமாற்றுதல்.

**தகவல்**

தரையை அழகுபடுத்துவதற்காகக் கிரேக்கர்களால் 'மோசேக்' முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

ஆசிரியர் குறிப்பு

1.1.1(ii)

- துண்டு ஒட்டுப்படப் படைப்புகளில் கலைக்கூறுகளை அடையாளங்கண்டு அதனைப் படைப்போடு தொடர்புபடுத்திக் கலந்துரையாடுதல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21 ஆம் நூற்றாண்டு:** தகவல் நிறைந்தவர்

## துண்டு ஒட்டுப்பட ஓவியம்



மேற்கண்ட துண்டு ஒட்டுப்படப் படைப்பில் இடம்பெற்றுள்ள கலைமொழியை (கலைக்கூறுகள், உருவாக்குதலின் கோட்பாடுகள்) அடையாளங்கண்டு உனது ஆசிரியருடன் கலந்துரையாடுக.

அ) மேல் தள வடிவமைப்பு

ஆ) இடைவெளி

இ) சமநிலை

ஈ) எதிர்மறை வண்ணம்

உ) முதன்மைக் கூறு

2.1.2(i)
2.1.2(ii)

**ஆசிரியர் குறிப்பு**

- காட்சிக் கலைமொழி அறிவின்வழி, உபகரணங்கள், நுட்பமுறை, அமலாக்க முறையை அறிதல்.
- கத்தரித்தல், ஒட்டுதல் நுட்பத்தின்வழி துண்டு ஒட்டுப்பட (மோசேக்) படைப்பினைப் படைக்க மாணவர்களைத் தூண்டுதல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** உருவாக்குதல் / மதிப்பிடுதல் **21 ஆம் நூற்றாண்டு:** சிந்தனையாளர்

## நடவடிக்கை 2

'மோசேக்' இல் வேறு பல நுட்பங்களைப் பயன்படுத்தி படைப்பை உருவாக்கவும்.

1





நூல் கண்டு



2





கற்கள்



3





குச்சிகள்



4





தானிய வகைகள்



1.1.1(ii)
2.1.1(ii)

**ஆசிரியர் குறிப்பு**

- துண்டு ஒட்டுப்படப் படைப்புகளில் கலைக்கூறுகளை அடையாளங்கண்டு அவற்றைப் படைப்போடு தொடர்புபடுத்திக் கலந்துரையாடுதல்.
- காட்சிக் கலைமொழி அறிவின்வழி, உபகரணங்கள், நுட்பமுறை, அமலாக்க முறையை அறிதல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** உருவாக்குதல் / மதிப்பிடுதல் **21 ஆம் நூற்றாண்டு:** சிந்தனையாளர்

# வட்டமிடும் வண்டு

1




கருவிகளும் பொருள்களும்

2




வரைதல்

3



வரைதல், தாள்களைக் கத்தரித்தல்

4




ஒட்டுதல்

## உங்கள் சிந்தனைக்கு


'கோலாஜ்'ஜிக்கும் 'மோசேக்'கிற்கும் உள்ள வேறுபாட்டினைக் கண்டறிக.

5



ஒட்டுதல்

6



நிறைவு செய்தல்



முழுமையான படைப்பு

## பொருள்களும் கருவிகளும்



சித்திரத்தாள்



எழுதுகோல்



கத்தரிக்கோல்



பசை



வண்ணத்தாள்

2.1.2(i-ii)
3.1.1(i-v)
4.1.1
4.1.2

ஆசிரியர் குறிப்பு

- துண்டு ஒட்டுப்பட நுட்பத்தில் கலைப்படைப்பினை உருவாக்க மாணவர்களுக்கு வழிகாட்டியாக இருத்தல்.
- படைப்பினைச் சீர்மைப்படுத்தத் தூண்டுதல்.
- உருவாக்கிய படைப்பினைக் காட்சிக்கு வைத்து மதித்துப் போற்றும்படி தூண்டுதல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** உருவாக்குதல் / மதிப்பிடுதல் **21 ஆம் நூற்றாண்டு:** சிந்தனையாளர்

# வாருங்கள் பாடுவோம்

தகவல்

Track 4 Pic


என்னை நுணுகுக

**சுதி** (pic)

- சுதியை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.
- கீழ் சுதியில் பாடும்பொழுது தொனி தாழ்ந்து இருக்கும்.
- மேல் சுதியில் பாடும்பொழுது தொனி உயர்ந்து இருக்கும்.

சுதி பல்வகை தொனியை உருவாக்க உதவும்.

சுரவரிசையைச் சுதியோடு பாடும் நிலையை உருவாக்கும்.



கீழ் சுதி மேல் சுதி

Track 5 Tempo Cepat
Track 6 Tempo Lambat

என்னை நுணுகுக


**நடை - வேகம்** (tempo)

நடை என்பது பாடலில் காணப்படும் கால வேகத்தைக் காட்டுவதாகும்.

வேக நடை, மிதமான நடை, மெதுவான நடை என இது பிரிக்கப்பட்டுள்ளது.

| கால அளவு | கலைச் சொல் |
|---|---|
| விரைவான | அலேக்ரோ |
| மெதுவான | அண்டாந்தே |
| மிதமான | மோடேராத்தோ |

**நடை - வேகம்** (tempo)



Track 7 Tempo Cepat Perkusi
Track 8 Tempo Lambat Perkusi

| | |
|---|---|
| கீழே மேலே<br>கீழே மேலே<br>சேர்ந்து பாடுவோம் | கீழ் சுதி, மேல் சுதி<br>கீழ் சுதி, மேல் சுதி<br>இதுதான் எங்கள் இசை |

Track 9 Contoh Pic

என்னை நுணுகுக

ஆசிரியர் குறிப்பு

2.2.2
2.2.3

- சுதி, நடை குறித்து மாணவர்களுக்கு விளக்கி அவற்றில் அவர்கள் திறன் பெற வழிகாட்டுதல்.

## சுதிக்கும் நடைக்கும் ஏற்பப் பாடுதல்

Track 10 Lagu Tempo Lambat
Track 11 Instrumental Tempo Lambat
Track 12 Lagu Tempo cepat
Track 13 Instrumental Tempo Cepat

காலை நேரம் உறங்காதே
கடமையைச் செய்யத் தவறாதே! } x2
தாய் தந்தை காலடியை
வணங்காமல் செல்லாதே! } x2
(காலை)

தீமை செய்யும் நண்பனை நீ
ஒரு போதும் நெருங்காதே!
நல்ல நல்ல பண்புகளை
நாளும் கற்க மறவாதே! } x2
(காலை)

உதவி கேட்டு வருவோரிடம்
இல்லை என்று சொல்லாதே
ஏழ்மைப் கொண்ட சூழலை நீ
ஏளனமாய்ப் பார்க்காதே
(காலை)






### உங்களுக்குத் தெரியுமா?

- ஏற்ற சுதியோடு பாடும் முறையானது மிக அவசியம்.
- சுரவரிசை சைகையைக் (Solfa - do, re, mi) கெர்வன் (Curwen) 18ஆம் நூற்றாண்டில் அறிமுகம் செய்தார்.


**ஆசிரியர் குறிப்பு**

2.2.2
2.2.3

- (pemanasan vokal) இசையின்றி வாசிக்க; பாடத் தூண்டுதல்
- உடலமைவு சரியாக இருப்பதை உறுதிசெய்தல்

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21 ஆம் நூற்றாண்டு:** குழுவாகச் செயல்படுதல்

# அலகு 3 'புவாலாமான்' கோலம்




'புவாலாமான்' என்பது எண்ணெய் திரவம் கொண்ட சாயம் மற்றும் தண்ணீரைக் கொண்டு மேற்கொள்ளப்படும் ஒரு நடவடிக்கையாகும். இது திட்டமிடா கோல வகையைச் சேர்ந்ததாகும்.



'கிரேனைட்' கல்



பாறைக் கல்



பளிங்கு கல்

'புவாலாமான்' பாறைக் கற்கள், பளிங்குக் கற்கள் போன்றவற்றில் இயற்கையாகத் தென்படும் கோலங்கள்.

## நடவடிக்கை 1

அ. பள்ளி வளாகத்திலும் இருப்பிட வளாகத்திலும் இது போன்ற கோலங்கள் பதிந்த கட்டமைப்புகளைக் கண்டறிக.

ஆ. அதன் பயன்பாடு, கலையியல் பற்றி உனது நண்பர்களுடன் கலந்துரையாடுக.

**ஆசிரியர் குறிப்பு**

1.1.2(i)
2.1.5(i)
2.1.5(ii)

- 'புவாலாமான்' கலை படைப்புகளில் காட்சிக் கலைமொழிகளை அடையாளங்கண்டு அவற்றைப் படைப்போடு தொடர்புபடுத்திக் கலந்துரையாடுதல்.
- காட்சிக் கலைமொழி அறிவின்வழி, உபகரணங்கள், நுட்பமுறை, அமலாக்க முறையை அறிதல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21 ஆம் நூற்றாண்டு:** சிந்தனையாளர்

## ‘புவாலாமான்’ கோலங்களை உருவாக்கும் நுட்ப முறை

கோலங்களை உருவாக்கும் தளத்தினை நெகிழிப் பையால் மூடினால் தளத்தினை மீண்டும் பயன்படுத்த சிரமம் இருக்காது.





தளம் சித்திரத்தாள் நுழைய ஏற்றதாக இருக்க வேண்டும். சிறிதாக இருந்தால் கோல உருவாக்கத்தில் சிரமங்கள் ஏற்படும்.







‘புவாலாமான்’ கோல உருவாக்கத்தில் படைக்கப்பட்ட சில பொருள்கள்.

ஆசிரியர் குறிப்பு

2.1.2(i-ii)
3.1.1(i-v)
4.1.1
4.1.2

- காட்சிக் கலைமொழி அறிவின்வழி, உபகரணங்கள், நுட்பமுறை, அமலாக்க முறையை அறிதல்.
- ‘புவாலாமான்’ கோலங்களின்வழி பயன்பாட்டுப் பொருள்களை மாணவர்கள் உருவாக்கத் தூண்டுதல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21 ஆம் நூற்றாண்டு:** தொடர்புகொள்ளும் திறன்


## ‘புவாலாமான்’

### பொருள்களும் கருவிகளும்


தளம் / நெகிழிப்பை


தூரிகை


சாயம்


சித்திரத்தாள்


நீர்

1


தளம்


2


நெகிழிப்பையால் மூடுதல்

3


நீரை நிரப்புதல்

4


சாயத்தைக் கலக்குதல்





ஓரிரு சொட்டு விடுதல்




குச்சியால் கோலமிடுதல்




சித்திரத்தாளை ஒத்தி எடுத்தல்



முழுமையான படைப்பு

**பாதுகாப்பு**

இந்த நடவடிக்கையை ஆசிரியர் துணையுடன் மேற்கொள்ளவும்.

**ஆசிரியர் குறிப்பு**


2.1.5(i-ii)
3.1.2(i-iv)

- 'புவாலாமான்' கலைப்படைப்பை உருவாக்கப் பயன்படுத்தும் உபகரணங்கள், நுட்பமுறை, அமலாக்க முறையை அறிந்து, கூறும்படி பணித்தல்.
- ஆக்கத்திறன் மிகுந்த கோல உருவாக்கத்தினைப் படைத்தல்.
- படைப்பினைச் சீர்மைப்படுத்தத் தூண்டுதல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** உருவாக்குதல் **21 ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

# சாவி தாங்கும் தளம்


## பொருள்களும் கருவிகளும்


கோலம்


காகித அட்டை




பசை


கொக்கி வளையம்


கத்தரிக்கோல்

1


வரைதல்

2


கத்தரித்தல்

3



ஒட்டுதல்

4


'புவாலாமான்'கோலத்தை வடிவமைத்தல்

5




வடிவத்தைக் கத்தரித்தல்

6




அட்டையில் ஒட்டுதல்

7




பின்புற வடிவமைப்பு

8



கொக்கியைச் சொருகுதல்

**பாதுகாப்பு**

இந்த நடவடிக்கையை ஆசிரியர் துணையுடன் மேற்கொள்ளவும்.



முழுமையான படைப்பு


**ஆசிரியர் குறிப்பு**

2.1.5(iii)
3.1.3(i-v)
4.1.1
4.1.2

- 'புவாலாமான்' நுட்பத்தின்வழி பயன்பாட்டுப் பொருளை உருவாக்க மாணவர்களைத் தூண்டுதல்.
- உருவாக்கிய படைப்பினைக் காட்சிக்கு வைத்து மதித்துப் போற்றும்படி தூண்டுதல்.

**வி.வ.கூ:** தொழில்முனைப்பு **உ.சி.தி:** உருவாக்குதல் / மதிப்பிடுதல் **21 ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்


தகவல் பெட்டி 1
**இசை வரிக்கோடு**




இசைக் குறியீடுகளை எழுதப் பயன்படும் 5 கோடுகளும் அவற்றின் இடைவெளியும் இசை வரிக்கோடுகளாகும்.

தகவல் பெட்டி 2
**பார்**


பார் எனப்படுவது நேரக் குறியீட்டைத் தாளத்தட்டு (Beat) எண்ணிக்கையில் பகுப்பதாகும். பொதுவாக வணிகப் பாடல்களில் தாளத்தட்டு ஒரு பாரில் (4 தாளத்தட்டு) 4 Beats அமைந்திருக்கும்.




**பார்க்கோடு**

இசை வரிக்கோட்டில் சுரங்களைப் பிரித்து எழுதுவதற்கும் அதன் ஏற்ற இறக்கத்தைத் தெரிந்து கொள்வதற்கும் நேரக் குறியீட்டிற்கு ஏற்றவாறு வரையப்பட்டிருக்கும்.

தகவல் பெட்டி 3
**திரெபல் கிலெ.்.ப்**



(treble clef ) ‘கிலெ.்.ப்’ ஓர் இசைக் குறியீடாகும். ஒவ்வோர் இசை வரிக்கோட்டின் தொடக்கத்தில் பயன்படுத்தப்படும். ‘கிலெ.்.ப்’ இசை வரிக்கோட்டில் காணப்படும் இசைக் குறியீடுகளுக்கு A, B, C, D, E, F, G எனப் பெயரிடக் காரணமாகும்.

தகவல் பெட்டி 4
**முடிவுக் கோடு**



முடிவுக் கோடு ஒரு மெல்லிய மற்றும் தடித்த கோடுகளைக் கொண்டது. முடிவுக் கோடு இசைக் கூறின் முடிவைக் குறிப்பதாகும்.

தகவல் பெட்டி 5
**தொடர் இசை பார்க்கோடு**




இறுதியில் காணப்படும் இரண்டு புள்ளிகள் இசையை மீண்டும் தொடரக் குறிக்கப்பட்டுள்ளது.

1.2.2
1.2.3

ஆசிரியர் குறிப்பு
• இசைக்குறியீட்டின் சொல்லியல் குறித்து அறிய மாணவர்களைத் தூண்டுதல்

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21 ஆம் நூற்றாண்டு:** சிந்தனையாளர்


தகவல் பெட்டி 6
(meter) **நேரக்குறியீடு**





(meter) எனப்படுவது இசையில் காணப்படும் நேரக் குறியீடாகும் (பிட்). ஒவ்வொரு பாரிலும் மொத்த நேரக் குறியீடுகள் சமமாகக் காணப்படும்.

2 - ஒரு பாரில் காணப்படும் தாளத் தட்டைக் குறிக்கும்.
4 - இசைக் குறியீட்டின் வகையைக் குறிக்கும்.
(உதாரணம் 4 என்பது ‘குரோசெட்டைக்’ குறிக்கும்.)

‘கிலே.்.ப் டிரெபெல்’ வரைவோம் வாரீர்





என்னை நுணுகுக




உங்களுக்குத் தெரியுமா?

- இசை வரிக்கோட்டில் 5 வரிக்கோடுகளும் 4 இடைவெளிகளிலும் இசைக் குறியீடுகளை எழுத உதவுகின்றன. கோடுகளும் பகுதிகளும் கீழிருந்து மேலாகக் கணக்கிடப்படும்.




- குழந்தைப் பாடல்களில் 8 முதல் 16 பார்கள் மட்டுமே காணப்படும்.


I.2.2
I.2.3

ஆசிரியர் குறிப்பு
- ‘கிலே.்.ப் டிரெபெலைப்’ படிநிலையை ஒட்டிய பணித்தாளைத் தயார் செய்து மாணவர்களை வரையச் செய்தல்.
- ‘கிலே.்.ப் டிரெபெலின்’ வடிவம் முறையாக இருப்பதை உறுதி செய்யவும்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21 ஆம் நூற்றாண்டு:** சிந்தனையாளர்

## இசை மர வரைபடம்

மர வரைபடத்திலுள்ள இசைக் குறியீட்டினைப் பயன்படுத்தி 4 கணித வாக்கியங்களை உருவாக்குக.




**Petunjuk**

- இசைக் குறியீடு (இளஞ்சிவப்பு)
- இசைக் குறியீட்டு மதிப்பு (மஞ்சள்)
- ஓய்வுக் குறியீடு (பச்சை)
- இசைக் குறியீட்டுப் பெயர் (நீலம்)


1.2.1 (ii)
1.2.1 (iii)
1.2.3


**ஆசிரியர் குறிப்பு**


- மர வரைபடத்திலுள்ள இசைக் குறியீடுகளைப் பற்றிக் கலந்துரையாடுக.
- குறியீட்டையும் இசை மர வரைபடத்தையும் கொண்டு கணித நடவடிக்கையாக மாணவர்களுக்குக் கொடுத்தல்.

**வி.வ.கூ:** அறிவியலும் தொழில்நுட்பமும் **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21 ஆம் நூற்றாண்டு:** தகவல் நிறைந்தவர்

# இசைமொழியை அறிதல்




( ’ ) – மேல் சுரத்தைக் காட்டும்

1.2.1 (i)
1.2.3

**ஆசிரியர் குறிப்பு**

- சுரம் B,A,G (நினைவுகூர்தல்).
- C’ & D’ சுரங்களை அறிமுகம் செய்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21 ஆம் நூற்றாண்டு:** தகவல் நிறைந்தவர்

## பாடலாம் வாரீர்!


Track 14 Lagu Kalai
Track 15 Instrumental Kalai

காலை நேர சூரியனில்
கடலின் உடல் மின்னுது!
காற்றுகூட நீரைத் தொட்டு
குளிரை இங்கே கூட்டுது! x2

ஓடி வரும் அலைகள்கூடக்
கரையைத் கட்டித் தழுவுது!
கூடி வந்த மீன்களெல்லாம்
கடலில் மூழ்கி குளிக்குது!

சின்னஞ் சிறிய நண்டு ஒன்று
அங்கும் இங்கும் ஓடுது!
அழகான கோலம் போட்டு
ஆடிப் பாடி மகிழுது! x2

(காலை)



**ஆசிரியர் குறிப்பு**

2.2.2
2.2.3
3.4.3
4.2.2

- 14வது தடத்தை ஒலிபரப்பி, மாணவர்களைப் பாடலை நடையுடனும் சுதியுடனும் முறையாகப் பாடச் செய்தல்.
- பாடலுக்கு ஏற்ப உடலை அசைத்தல்.
- மறுசுழற்சிப் பொருளை வைத்து தாளக் கருவிகளை உருவாக்கி அவற்றை இசைத்து, உடலை அசைக்கவும்.

**வி.வ.கூ:** சுற்றுச்சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல் **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21 ஆம் நூற்றாண்டு:** அன்பானவர்/ பரிவுள்ளவர்

# அலகு 4 சிற்பக்கலையில் கலை வடிவங்கள்

**சிற்பம்** என்பது ஒரு முப்பரிமாண கலைப் பொருள் ஆகும். இது கடினமான அல்லது நெகிழ்வுத் தன்மை கொண்ட பொருள்களுக்கு உருவம் கொடுப்பதன் மூலம் உருவாக்கப்படுகிறது. கற்கள், உலோகம், மரம், மண் போன்றவை சிற்பங்கள் செய்வதற்காகப் பயன்படும் பொருள்களாகும். சிற்பங்கள் ஒட்டுதல், உருக்கி வார்த்தல், அச்சுக்களில் அழுத்துதல், கைகளால் வடிவமைத்துச் சூளையில்-சுடுதல் போன்ற பலவித செயல்முறைகளால் உருவாக்கப்படுகின்றன. சிற்பங்களை உருவாக்குபவர் சிற்பி எனப்படுகிறார்.

## பொருத்தும் நுட்பத்தில் சில கைவண்ணங்கள்

பொருத்துதல் கலை என்பது பல்வகையான பொருள்களை ஒருங்கிணைத்து அழகும் பொருளும் மிகுந்த ஒரு படைப்பினை உருவாக்குதல் ஆகும்.









ஆசிரியர் குறிப்பு

1.1.3(i)
2.1.7(i)
2.1.7(ii)

- பொருத்தும் கலைப் படைப்புகளில் கலைக் கூறுகளை அடையாளங்கண்டு அதனைப் படைப்போடு தொடர்புபடுத்திக் கலந்துரையாடுதல்.
- காட்சிக்கலை அறிவின்வழி, உபகரணங்கள், நுட்பமுறை, அமலாக்க முறையை அறிதல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21 ஆம் நூற்றாண்டு:** தகவல் நிறைந்தவர் / நாட்டுப் பற்று

# வேற்றுலக மனிதன்

## பொருள்களும் கருவிகளும்



காகித அட்டை



நெகிழிப் புட்டி மூடிகள்





பசை



எழுதுகோல்



கரண்டி



புட்டித் திறப்பான்/
திருகுமறை

1



வரைதல்

2



வட்டமாகக் கத்தரித்தல்

3



திருகுமறையைப் பொருத்துதல்

4



கத்தரித்தல்

5



கழுத்தை அமைத்தல்

6




மூடியை ஒட்டுதல்

7



உடலை அமைத்தல்

8



மூடியை (கால்) ஒட்டுதல்

9



கைகளை அமைத்தல்

10




கால்களைக் கத்தரித்தல்

11



கால்களை உருவாக்குதல்



முழுமையான படைப்பு

**பாதுகாப்பு**

இந்த நடவடிக்கையை ஆசிரியர் துணையுடன் மேற்கொள்ளவும்.

2.1.7(i-ii)
3.1.4(i-vi)
4.1.1
4.1.2


**ஆசிரியர் குறிப்பு**

- உருவமைத்தலும் கட்டுதலும் துறையின் கீழ் பொருத்துதல் கலை வடிவத்தை உருவாக்க வழிகாட்டல்.
- படைப்பினைச் சீர்மைப்படுத்தத் தூண்டுதல்.
- உருவாக்கிய படைப்பினைக் காட்சிக்கு வைத்து மதித்துப் போற்றும்படி தூண்டுதல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21 ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

## ‘லெகாத்தோ’ (Legato), ‘ஸ்தகாதோ’ (Staccato)

என்னை நுணுகுக






**‘லெகாத்தோ’ (Legato)**
பாடல் எவ்வித தடங்களுமின்றிச் சீராகப் பாடுவதையும் அல்லது இசைக்கப்படுவதையும் லெகாத்தோ (Legato) எனக் கூறுவர். இது லத்தின் சொல்லாகும். ஒன்றுடன் ஒன்று இணைக்கப்படுவதைக் குறிக்கும்.

**‘ஸ்தகாதோ’ (Staccato)**
பாடல் விட்டுவிட்டுப் பாடுதலையோ இசைப்பதையோ குறிப்பதாகும். ஸ்தகாதோ (Staccato) லத்தின் சொல்லாகும்.

2.2.4
2.2.2
2.2.3


ஆசிரியர் குறிப்பு

- பாடலினைக் கேட்டு அதில் இடம்பெற்றுள்ள ‘லெகாத்தோ,’ ‘ஸ்தகாதோ’ குறித்துக் கலந்துரையாடுதல்.

**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21 ஆம் நூற்றாண்டு:** தகவல் நிறைந்தவர்

## வாருங்கள் ஒப்பிட்டும், வேறுபடுத்தியும் பார்ப்போம்.






Track 18 Gong
Track 19 Tukul Paku
Track 20 Kipas Pusing
Track 21 Hon Kereta
Track 22 Drum
Track 23 simbal
Track 24 Tepuk Tangan
Track 25 Tik Tok

Track 26 Pengisar
Track 27 Air Terjun
Track 28 Batu Lesung
Track 29 Ular Berdesir
Track 30 Hentak Kaki
Track 31 Berlari
Track 32 Ketuk Pintu
Track 33 Angin Kencang

**ஆசிரியர் குறிப்பு**

2.2.4

- 18 ஆம் தடத்திலிருந்து 33 ஆம் தடம் வரையில் உள்ள ஒலியையும் சத்தத்தையும் ஒப்பிட்டும் வேறுபடுத்தியும் அவை ஸ்தகாதோ அல்லது லெகாதோ என்று வகைப்படுத்தச் செய்தல்.
- மாணவர்களின் முடிவைச் சீர்தூக்கிப் பார்க்கச் செய்தல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21 ஆம் நூற்றாண்டு:** சிந்தனையாளர்

## பாடுவோம் வாரீர்


Track 34 Lagu Negara
Track 35 Instrumental Lagu Negara




நாடும் வீடும் நலம்பெறவே
நாமும் இங்கு கூடுவோம்!
தேசியத்தில் நமது பங்கை
நேசமுடனே ஆற்றுவோம்! x2

மூவினமும் ஒன்று சேர்ந்து
ஒற்றுமையாய்ப் பழகுவோம்
நற்றமிழைக் கற்று நாமும்
நன்னெறியைப் போற்றுவோம் x2
(நாடும் வீடும்)

நீதி கூறும் பாடலை
சேர்ந்து நாமும் பாடுவோம்
நட்பு கொண்ட உள்ளத்தை
பாசத்தோடு நாடுவோம்!




மாணவர்கள் உற்சாகமூட்டும் பாடல்களைப் பாடுவர்.
இரு சுரங்களைச் சரியாகப் பாடுதல்.



‘லெகாதோ’ (Legato)

- சீராகப் பாட வேண்டிய முறைகளைக் காட்டுகின்றது.



‘ஸ்தகத்தோ’ (Staccato)

- விட்டுவிட்டுப் பாட வேண்டிய முறைகளைக் காட்டுகின்றது.

2.2.4
2.2.2
2.2.3

**ஆசிரியர் குறிப்பு**

- இசையின்றிப் பாட மாணவர்களைத் தூண்டுதல்.
- சரியான உடலமைவில் இருத்தலை உறுதி செய்தல்.



**வி.வ.கூ:** நாட்டுப்பற்று **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21 ஆம் நூற்றாண்டு:** நாட்டுப்பற்று

# அலகு 5 செதுக்கும் கலை

மரக்கட்டை, மரப்பலகை, உலோகம் ஆகியவற்றில் சுபிட்சத்தை உருவாக்கிக் குடைதல், கீறல், செதுக்குதல் நடவடிக்கைகளின் வழி செதுக்கும் கலை படைக்கப்படுகிறது.



**பாதுகாப்பு**

இந்த நடவடிக்கையை ஆசிரியர் துணையுடன் மேற்கொள்ளவும்.

## நடவடிக்கை 1

அ. மாணவர்களே Warisan Ukiran Kayu என இணையத்தளத்தில் எழுத்துருவேற்றிக் கலையியல் திரட்டேட்டிற்காகத் தகவலைச் சேகரிக்கவும்.

ஆ. செதுக்குதல் குறித்த வரலாறு, நுட்பம், சுபிட்சம், பயன்பாடு ஆகிய விவரங்களைத் திரட்டேட்டில் இருப்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்.

1.1.4(i)
2.1.9(i)
2.1.9(ii)


**ஆசிரியர் குறிப்பு**

- செதுக்கும் கலை படைப்புகளில் காட்சிக்கலையின் கூறுகளை அடையாளங்கண்டு அவற்றைப் படைப்போடு தொடர்புபடுத்திக் கலந்துரையாடுதல்.
- காட்சிக்கலைக் கூறு அறிவின்வழி, உபகரணங்கள், நுட்பமுறை, அமலாக்க முறையை அறிதல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** பகுத்தாய்தல் / மதிப்பிடுதல் **21 ஆம் நூற்றாண்டு:** தகவல் நிறைந்தவர்

## செதுக்கும் கலையில் இடம்பெற்றுள்ள சில சுபிட்சங்கள்






சீனப் பூ சுபிட்சம்
(Motif Bunga Cina)



சூரிய காந்திப்பூ சுபிட்சம்
(Motif Bunga Matahari)



பூச்சோக் ரெபோங் சுபிட்சம்
(Motif Pucuk Rebung)

### தகவல்

நமது நாட்டில் லத்தீவ் பின் லோங், செதுக்கும் கலையில் மிகவும் கை தேர்ந்தவர்.



ஆசிரியர் குறிப்பு

2.1.9(i)
2.1.9(ii)

- காட்சிக் கலைமொழி அறிவின்வழி, உபகரணங்கள், நுட்பமுறை, அமலாக்க முறையை அறிதல்.
- செதுக்கும் கலையின் சுபிட்சங்களை விரிவாக அறிய மாணவர்களைத் தூண்டுதல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் / தகவல் தொடர்பு **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21 ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

## துணி மாட்டி

### பொருள்களும் கருவிகளும்


காகித அட்டை


செதுக்கும் கத்தி


புட்டித் திறப்பான்
திருகுமறை


கத்தரிக்கோல்


எழுதுகோல்

1


வட்டம் வரைதல்

2


வட்டமாகக் கத்தரித்தல்

3


சுபிட்சம் வரைதல்

4


செதுக்குதல்

5



செதுக்கி முடித்தல்

6



துளையிடுதல்

7



புட்டித் திறப்பானைப் பொருத்துதல்



முழுமையான படைப்பு

**பாதுகாப்பு**

இந்த நடவடிக்கையை ஆசிரியர் துணையுடன் மேற்கொள்ளவும்.

**ஆசிரியர் குறிப்பு**

2.1.9(i-ii)
3.1.5(i-v)
4.1.1
4.1.2

- ஆக்கத்திறன் மிக்க செதுக்குதல் கலைப் படைப்பினை உருவாக்க மாணவர்களுக்கு வழிகாட்டியாக இருத்தல்.
- உருவாக்கிய படைப்பினைக் காட்சிக்கு வைத்து மதித்துப் போற்றும்படி தூண்டுதல்.


**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** உருவாக்குதல் / பயன்படுத்துதல் **21 ஆம் நூற்றாண்டு:** சிந்தனையாளர் / அறியும் ஆர்வம்

# முகிழும் சுபிட்சம்

## பொருள்களும் கருவிகளும்



வழலைக் கட்டி



குச்சி




எழுதுகோல்




தூரிகை

1



பூ வரைதல்

2



குச்சியால் குடைதல்

3



செதுக்குதல்

4



நிறைவு செய்தல்



முழுமையான படைப்பு

**பாதுகாப்பு**

இந்த நடவடிக்கையை ஆசிரியர் துணையுடன் மேற்கொள்ளவும்.

**ஆசிரியர் குறிப்பு**


2.1.9(i-ii)
3.1.5(i-v)
4.1.1
4.1.2


- ஆக்கத்திறன் மிக்க செதுக்குதல் கலைப் படைப்பினை உருவாக்க மாணவர்களுக்கு வழிகாட்டியாக இருத்தல்.
- உருவாக்கிய படைப்பினைக் காட்சிக்கு வைத்து மதித்துப் போற்றும்படி தூண்டுதல்.


**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** உருவாக்குதல் / பயன்படுத்துதல் **21 ஆம் நூற்றாண்டு:** சிந்தனையாளர் / அறியும் ஆர்வம்



## இசை நிலைய விளையாட்டு








1.2.1
1.2.2

**ஆசிரியர் குறிப்பு**

- மாணவர்கள் நடவடிக்கைக்கு ஏற்ற குழு நடவடிக்கையை மேற்கொள்ளல்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21 ஆம் நூற்றாண்டு:** சிந்தனையாளர்

## தாளத்தட்டுக்கு ஏற்பக் கைத்தட்டு





## தாளத்தட்டு முறையை உருவாக்குக.



**விளையாடும் முறை**

1. 15 தாளத்தட்டு முட்டைகளையும் பாத்திரத்தையும் தயார் செய்க.
2. ஒவ்வொரு முட்டையிலும் எழுதப்பட்ட காகிதத்தை வைக்கவும்.



3. முட்டைகளை ஒவ்வொருவராகக் குழு முறையில் எடுத்து சிறந்த தாளத்தட்டைப் படைக்கச் செய்தல்.
4. இவ்விளையாட்டினைப் பல்வகையாக்கித் தாளத்தட்டினை உருவாக்கச் செய்தல்.

3.2.1
3.2.3
4.2.2
1.2.3

ஆசிரியர் குறிப்பு
- தாளத்தட்டு அட்டையை உருவாக்கி மாணவர்களைத் தாளத்தட்டுக்கு ஏற்பக் கைதட்டச் செய்தல்.
- இந்நடவடிக்கையைத் தாளக் கருவிகளை வைத்துச் செய்யலாம்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** உருவாக்குதல் **21 ஆம் நூற்றாண்டு:** தொடர்பு கொள்ளும் திறன்





## நடைக்கு ஏற்ப வாசித்தல்




தாள இசைக் கருவியை இசைப்பதை அறிந்த பிறகு சரியான நடைக்கு ஏற்ப வாசிக்கவும்.




2.2.5
2.2.6
1.2.3
3.2.1

**ஆசிரியர் குறிப்பு**


- தாளத்தட்டினை அறிந்து, அதற்கேற்ற நிலையில் கைத்தட்டும் பயிற்சியினை மேற்கொள்ளல்.
- இசைக் கருவிகளைச் சரியாகக் கையாளப் பணித்தல்.


**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** உருவாக்குதல் **21 ஆம் நூற்றாண்டு:** குழுவாகச் செயல்படுதல்


# தாளக் கருவிகளை இசைப்போம்

Track 40 Rekorder Kiri Kanan
Track 41 Perkusi Kiri Kanan

KIRI - KANAN




2.2.6
2.2.5
1.2.3
3.4.3

ஆசிரியர் குறிப்பு

ஒலிவட்டின் உதவியோடு பாடலையும் இசையையும் சரியாக மேற்கொள்ள மாணவர்களைத் தூண்டுதல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** உருவாக்குதல் **21 ஆம் நூற்றாண்டு:** குழுவாகச் செயல்படுதல்

1. தாயக் கட்டையைப் பயன்படுத்தி 2 - 3 பேர் வரை விளையாடலாம்.
2. கட்டத்தில் இடம்பெற்றுள்ள வினாக்களுக்குச் சரியான விடைகூறி முன்னேறு.
3. கலையியல் தீவை அடையும் முதல் வெற்றியாளன் யார் என்பதைப் பார்ப்போம்?

## கடல் வழி உலா

1 ஆரம்பம்

2



அச்சடித்தல்
சரி / தவறு


3 பக்கவாட்டமாக ஒட்டும் கலை?

10

11 இசைக் குறியீட்டின் பெயர் ஒன்றைக் கூறுக.

12

13



இக்கலையின் பெயர் என்ன?

14




குறியீட்டை பெயரிடுக.

15

16 ரெக்கோடர் எந்தக் குடும்பத்தைச் சேர்ந்தது?

17



என்ன நுட்பம்?

18


கலையியல் தீவு
21
இஃது எந்த
வகைக் கலை?
22
20
23
இது என்ன
நுட்பம்?
25
வெற்றி
19
24
என்ன தன்மை?
9
8
'ஸ்தகாதோ' என்றால் என்ன?
7
6
செதுக்கும்
கலையில்
கைதேர்ந்தவர்.
4
5
மேல் தள வடிவமைப்பு இரண்டில்
ஒன்றைக் கூறுக.

## பருவம் இரண்டு - திட்ட நடவடிக்கை

படைப்பின் தலைப்பு: ஓநாயும் ஏழு ஆட்டுக் குட்டிகளும்



### நடவடிக்கைக்கு முன்

1. பருவம் இரண்டில் படைத்த (அலகு 6 முதல் 10 வரை) படைப்புகளில் ஒன்றை முதன்மைக் கருவாகத் தேர்வு செய்யவும்.
2. 6 முதல் 8 பேர் அடங்கிய குழுவை உருவாக்கவும்.
3. பாடலைத் தேர்வு செய்து மனனம் செய்யவும்.
4. முறையாகப் பயிற்சியை மேற்கொள்ள கால அட்டவணையைத் தயாரிக்கவும்.
5. பாடலுக்கேற்ற இசைக் கருவிகளைத் தயார் செய்து ஒத்திகை பார்க்கவும்.
6. திட்ட நடவடிக்கைக்கான இடத்தை அடையாளங் காணவும்.

### நடவடிக்கையின் போது

1. குறிப்பிட்ட நேரத்தில், மாணவர்கள் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட பொறுப்பினைக் கடமை உணர்வோடு அரங்கேற்றுதல்.
2. ஏற்ற பாத்திரப் படைப்போடு மாணவர்கள் தேவையான கருவி, உபகரணங்களோடு படைப்பினைக் கலை நயத்தோடு சிறப்பாகப் படைத்தல்.



## நடவடிக்கைக்குப் பின்

1. படைப்பின்போது மேடையில் பயன்படுத்திய பொருள்கள் அனைத்தையும் முறையாக அடுக்கி, இடத்தைத் தூய்மை செய்தல்.
2. காட்சிப் பதிவுகளை முறைப்படுத்தி, மேற்கண்ட படைப்பைப் பற்றித் திரட்டேடு தயாரித்தல்.

**ஆசிரியர் குறிப்பு**

3.3.1 (i-iv)
3.3.4
3.4.1
3.4.2
3.4.3
3.4.6
4.2.2

- இரண்டாம் பருவத் திட்ட நடவடிக்கைக்காக அலகு 6 முதல் 7 வரையிலான பாட உள்ளடக்கத்தைப் பயன்படுத்தி அதன் முன்னேற்பாடு, படைப்பு, தேவையான பொருள்கள் ஆகியவற்றைத் தயார் செய்ய மாணவர்களுக்கு வழிகாட்டல்.
- படைப்பிற்கான இசையைத் தயார் செய்து படைப்பிற்குப் பயன்படும் பொருள்கள் முறையாகக் கையாளப்படுவதை உறுதி செய்தல்.
- படைப்பிற்குப் பிறகு பயன்படுத்திய கருவிகளும் பொருள்களும் முறையாக அடுக்கி வைக்கப்படுவதுடன் திட்ட நடவடிக்கைத் தலம் தூய்மையாக இருப்பதை உறுதி செய்தல்.
